கதிர்காம வேலவன் பவனி வருகின்றான்

17634

பண்டிதர், சி. கணபதிப்பிள்ளை அவர்கள்
தொகுத்து எழுதியது.

மெய்கண்டான்
வெளியீடு

கதிர்காம வேலவன் பவனி வருகின்றான்

தொகுத்தெழுதியவர் :

பண்டிதர் சி. கணபதிப்பிள்ளை அவர்கள்

(போசிரியர், சைவாசிரிய கலாசாலை, திருநெல்வேலி, யாழ்ப்பாணம்)

மெய்கண்டான் அச்சியந்திரசாலை,
மட்டுவில், சாவகச்சேரி.

அறிவித்தல்

மெய்கண்டான் திருக்குறட் கலண்டர், டயறிகளுக்கு

எந்த வருடத்திலும் அக்டோபர் மீ 5-ந் திகதிக்கு முன் ஆடர் செய்தால், விசேஷ கமிஷனுடன் நிச்சயமாகப் பெற்றுக்கொள்ளலாம். நவம்பர் மீ 5-ந் திகதிக்கு முன் ஆடர் செய்தால் சாதாரண கமிஷனுடன் பெறலாம். டிசம்பர் 20க்குள் வரும் ஆடர்களுக்கும் பெறக் கூடும். பிந்தினுல் கிடைப்பதரிது.

முற்பணத்துடன் ஆடர் செய்க.

மெய்கண்டான் அச்சியந்திரசாலை,
மட்டுவில், சாவகச்சேரி.

அறிமுகம்

முருக பக்தர்கள் ஓதவேண்டிய நூல்களில் திருமுருகாற்றுப்படை முதன்மையானது. அதற்கு நாவலர் எழுதிய உரை, இரத்தினத்தின் சோபையை மேன்மேலும் மிகுவிக்கின்ற மாற்றுயர்ந்த பொன்போன்றது. பொன்னும் மணியும் போன்ற அந்த நூலுரைகளை ஞாபகம் செய்துவைக்கும் முகமாக, '**கதிர்காம வேலவன் பவனி வருகின்றான்**' என்ற இச்சிறு சுவடி தொகுக்கப்பட்டிருக்கிறது.

'**குன்றமெறிந்தாய்**' முதலிய வெண்பாக்கள் பிரசித்தமானவைகள். '**மூவிரு முகங்கள்**' முதலிய தோத்திரங்கள், முருக உபாசகரான கச்சியப்ப சிவாசாரிய சுவாமிகள் அருளியவைகள்; அத்தியற்புத அதிமதுர சுத்தச் செந்தமிழாகிய கந்த புராணத்திலிருந்து எடுத்தவைகள்; திருவாசகம் போல் தித்தித்தமுதூறுபவைகள்; சந்தர்ப்பபூர்வமாக ஓதுபவர்களுக்குப் பக்தி சுரந்து பெருக்குபவைகள்.

சி. க.

பதிப்புரை

எமது அன்பின் வேண்டுகோளுக்கிணங்கி, இம்மலரை ஆக்கித்தந்த யாழ்ப்பாணம், திருநெல்வேலிச் சைவாசிரிய கலாசாலைத் தமிழ்ப்பேராசிரியர், பண்டிதர் சி. கணபதிப்பிள்ளை அவர்களுக்கு எமது மனமார்ந்த நன்றி உரித்தாகுக.

பக்தகோடிகள் இம்மலரை வாங்கிப் படித்து இன்புறுவதன்மூலம் பண்டிதர் அவர்களை, இது போன்ற இன்னும் அநேக மலர்கள் ஆக்கித் தமிழ் உலகிற்கு அளிக்க ஊக்கமளிப்பார்களென்று பூரணமாக நம்புகிறோம்.

பலவர்ணங்களில் தீட்டப்பெற்ற கதிர்காம வேலவனின் திருஉருவப்படத்தை அட்டை முகப்பில் தாங்கி மிளிரும் இம்மலரின் பெறுமதி அதிகமாயிருப்பினும் பக்தகோடிகளுக்குச் செய்யும் ஒரு தொண்டாகக்கருதி இதன் விலையை இருபத்தைந்து சதமாகக் குறைத்துள்ளோம். யாவரும் படித்து இன்புறுவார்களாக.

எமது அடுத்த மலர் அருட்பாடல் பெற்ற ஸ்தலமாகிய திருக்கேதீஸ்வரத்தைப் பற்றியது. அஃது இன்னும் சில நாட்களில் திருவருளால் வெளிவரும். எங்கணும் அருள் மணம் பரவுக.

ஆ. கந்தையா.

"மெய்கண்டான்"
மட்டுவில்,
சாவகச்சேரி.

உ

கணபதி துணை

கதிர்காம வேலவன் பவனி வருகின்றான்

"அருவமும் உருவுமாகி அநாதியாய்ப் பலவாய் ஒன்றாய்ப்
பிரமமாய் நின்ற சோதிப் பிழம்பதோர் மேனி யாகக்
கருணைகூர் முகங்க ளாறுங் கரங்கள் பன்னிரண்டுங்
கொண்டே
ஒருதிரு முருகன் வந்தாங் குதித்தனன் உலகம் உய்ய."

"உலகம் உவப்ப வலனேர்பு திரிதரு
பலர் புகழ் ஞாயிறு கடற்கண் டாஅங்கு
ஓவற இமைக்குஞ் சேண்விளங் கவிரொளி"

திருநீலகண்டம் போல நிர்மல மானதும், வெள்ளி விளிம்பு அடுத்த நீலத் திரைகள் நிரை நிரையே மடங்கி எழுந்து, பலவேறு மீன்களாகிய கண்களைச் சிமிட்டி, மணி கொழிப்பதுமான, பசிய சமுத்திர மத்தியிலே, வைகறை கழிந்து செல்லுகின்ற உதய நேரத்திலே, பல

வர்ண சாலங்களான கிரண கோடிகள் தன்னுள் அடங்கித், தகதக என்று ஒளிரும் ஒருசுவர்ண கும்பம்போன்று, இளைய செஞ்ஞாயிறு உதயஞ்செய்வது போல,

வெள்ளிய மகரந்தங்கள் சூழ்ந்த கோடிக்கணக்கான குவளைமலர்களைப் புஷ்பித்துக்கொண்டு, நீலவர்ணமேகம் விரிந்து மேலெழுந்தாற்போல, தன் கோலக்கலாபங்கள் விரிய, நீலரத்தினப் பரப்பின்மீது தங்கத் துகள்கள் பரந்தது போன்று, கண்களைப் பறிமுதல்செய்யும் வனப்புக்கள் திரை யெறிகின்ற, ஏக்கழுத்தம் ஒருபுறம் சரிந்து நோக்க, நஞ்சு பில்குகின்ற இள நாகங்களின் அங்காந்த வாயின் மணிகள், வளைந்த அழகிய மூக்கில் தொங்கி அழகுக்கு அழகுசெய்ய, இறுமாப்போடு அட்டதிக்குக்களும் அதிர ஆர்ப்பரவஞ் செய்கின்ற, சூர்மா ஆகிய பச்சைப் பசுந் தோகையின்மேலே, செம்பவளக் கதிர்கள் திரண்டு, ஒரு திருமேனி கொண்டதனையொப்பப், பரம்பரஞ் சோதியாய் ஒளிர்கின்ற, பொறிபுலங்கடந்த, பேரொளிப் பிழம்பாகிய பாலசுப்பிரமணியன் வீற்றிருந்தருளி,

மேலே எடுத்த 'ஏன்றடு விறற்கொடி'யாகிய, மணிவர்ணச் சேவல், நிமிர்த்திய கழுத்தைச் சிறிதே வளைத்து, அசுரர்கள், அதிரக் கூவிப், பாவ இருளை விடிவுசெய்ய, கிரௌஞ்ச மலையோடமையாமல், கோடிக்கணக்கான அடியார்களின் இடும்பை மலைகளையெல்லாம் துளைசெய்த 'எய்யா நல்லிசைச் செவ்வேல்' திவ்யமான கடப்பந்தார் புரளுகின்ற மார்பை அணுகித், திருப்புயங்களின் ஊடே பிரகாசிக்க, ஒருபக்கம் தெய்வநாயகி, மற்றொருபக்கம் வள்ளிநாயகி ஆகிய கற்பகவல்லிகள் படர,

சரவணதடாகத்திலே, அன்பர்களின் இருதயமாகிய செங்கமல மலரிலே, "உறுநர்த் தாங்கிய மதனுடை நோன்றாள்" களாகிய திருவடிகளின் இணைந்த சின் முத்திரைகளைப் பொறித்து,

ஞானானந்த மயமாகிய **கதிர்காம வீதியிலே,**

எழுவகைப்பருவ மாதர்களும் தம் பந்தம் இழந்து சம்பந்தங்கொள்ள,

காட்சிக்கெளிய **கதிர்காம வேலவனைப்**
பவனி வருகின்றான்.

"தாவில் கொள்கைத் தந்தொழில் முடிமார்
மனனேர் பெழுதரு வாணிற முகனே"

"தவஞ்செய்வார் தங்கருமஞ் செய்வார்." தங்கருமங்கள் எவை எவை உளவோ, அவைகளிலே கண்ணுங் கருத்துமானவர்களே தவஞ் செய்பவர்கள். அவர்களே **தந்தொழின் முடிமார்;** *அவர்களுடைய இருதயங்களே மாசுமறு அற்றவைகள்; அறங்குடியிருப்பவைகள்.*

அப்படிப்பட்ட தூய இருதயங்களிலேயே, பேரொளிப் பிழம்பாகிய திருமுருகனின் ஒளி முகங்கள் பிரகாசிக்கின்றன; அவ்வாறாகிய திருமுகங்களில்,

"மாயிருண் ஞாலம் மறுவின்றி விளங்கப்
பல் கதிர் விரிந்தன்று ஒருமுகம்"

[ஒருமுகமானது பெருமையாகிய இருளையுடைய உலகம் குற்றமில்லாமல் விளங்கும்பொருட்டுப் பல கிரணங்களையும் தோற்றுவித்தது.]

அத்திருமுகத்துக்கு உரிய திருக்கைகளில்,

"விண்செலன் மரபின் ஐயர்க்கு ஏந்தியது ஒருகை
உக்கஞ் சேர்த்தியது ஒருகை"

[ஒரு கையானது ஆகாயத்திலே இயங்குதலாகிய முறைமையினையுடைய தேவ இருடிகளுக்குப் பாதுகாவலாக எடுத்தது. அதற்கு இணையாகிய கை மருங்கிலே வைத்தது]

"ஒருமுகம், ஆர்வலரேத்த அமர்ந்தினிது ஒழுகிக்
காதலின் உவந்து வரங்கொடுத் தன்றே"

[ஒரு முகமானது அன்பர்கள் துதித்தால் அவர்கள் குற்றங்களை நீக்குதற்கு உடன்பட்டு, அவர்களுக்கு இனிதாய் நடந்து, அவர்கள் மேற்சென்ற விருப்பத்தினாலே மகிழ்ந்து அவர்கள் வேண்டும் வரங்களைக் கொடுத்தது.]

"நலம்பெறு கலிங்கத்துக் குறங்கின்மிசை அசைஇயது ஒருகை
அங்குசங் கடாவ ஒருகை"

[ஒருகையானது தோட்டியைச் செலுத்த, அதற்கு இணையாகிய கையானது நன்மை பொருந்திய ஆடையையுடைய தொடையின்மேலே கிடந்தது.]

"ஒருமுகம். மந்திர விதியின் மரபுளி வழாஅ
அந்தணர் வேள்வி ஓர்க் கும்மே"

[ஒரு முகமானது மந்திரத்தையுடைய வேதத்திற் சொல்லிய முறைமை தவறாத பிராமணர்களுடைய யாகங்களிலே தீங்கு வாராதபடி நினையாநிற்கும்]

'இருகை, ஐயிருவட்டமொடு எஃகுவலந் திரிப்ப'

[ஒருகையானது அழகிய பெரிய பரிசையைப்பிடிக்க அதற்கு இணையாகிய கை வேலாயுதத்தை வலமாகச் சுழற்றியது.]

'ஒருமுகம் எஞ்சிய பொருள்களை ஏமுற நாடித்
திங்கள் போலத் திசைவிளக் கும்மே'

[ஒருமுகமானது வேதாகமங்களிலே மறைந்து கிடக்கும் பொருள்களை இருடிகள் இன்பமுறும்படி ஆராய்ந்து போதித்துச் சந்திரனைப்போலத் திசைகள் எல்லாவற்றையும் விளக்கும்.]

'ஒருகை, மார்பொடு விளங்க ஒருகை
தாரொடு பொலிய'

[(முனிவர்களுக்கு உரையிறந்த பொருளை உணர்த்தும்போது) ஒருகையானது மார்பினுடனே மௌன முத்திரைகாட்டி விளங்க, அதற்கு இணையாகிய கை மார்பிலே தாழ்ந்த மாலையோடு சேர்ந்து பொலிந்தது.]

'ஒருமுகம், செறுநர்த் தேய்த்துச் செல்சம முருக்கிக்
கறுவுகொள் நெஞ்சமொடு களம்வேட் டன்றே.'

[ஒருமுகமானது நிகழாநின்ற சமத்துவத்தை ஒழித்துக் கோபங்கொண்ட திருவுள்ளத்துடனே பகைவர்களை வதைத்துப் போர்க்கள வேள்வியை வேட்டது]

'ஒருகை, கீழ்வீழ் தொடியொடு மீமிசைக் கொட்ப ஒருகை பாடின் படுமணி இரட்ட'

[ஒரு கையானது கீழ் வீழ் தொடியுடனே மேலே சுழன்று களவேள்வியை வேட்கும் முத்திரையைக் கொடுக்க, மற்றக்கையானது ஓசை இனிதாகிய அசைகின்ற மணியை மாறி ஒலிக்கப் பண்ணியது.]

"ஒருமுகம், குறவர் மடமகள் கொடிபோல் நுசுப்பின் மடவரல் வள்ளியொடு நகை அமர்ந்தன்றே"

[ஒருமுகமானது வேடருடைய மடப்பத்தையுடைய மகளும், கொடிபோலும் இடையினையுடைய இளம் பெண்ணும் ஆகிய வள்ளிநாயகியுடனே மகிழ்ச்சியைப் பொருந்திற்று.]

'ஒருகை, நீனிற விசும்பின் மலிதுளிபொழிய ஒருகை வானர மகளிர்க்கு வதுவை சூட்ட'

[ஒரு கையானது நீல நிறத்தையுடைய முகிலினாலே மிகுந்த மழையைப் பெய்விக்க, அதற்கு இணையாகிய கையானது சுவர்க்கத்திலுள்ள தெய்வப் பெண்களுக்கு மணமாலை சூட்டியது.]

இவ்வாறு ஆறுவிரு முகங்களும் திருவருள் பொழிய அத்திருவருள்வழியே, அந்த அந்த முகத்துக்கு உரியவாகிய திருக்கைகளும் திருவருள் சுரப்ப, **ஆறுமுகசுவாமியாய்ப்**, பன்னிரண்டு திருப்புயங்களோடும், பவனி வரு

கின்ற இத் திருக்கோலமானது, மகா பரிசுத்தர்களான மகான்களின் களங்கமற்ற திருவுள்ளங்களிலே அன்றி,

திருச்சீரலைவாய் திருப்பரங்குன்றம் திருவாவினன் குடி திருவேரகம் பழமுதிர்சோலை என்கின்ற திவ்ய க்ஷேத்திரங்களிலும், குன்றுதொறாடல்கள் பேசுகின்ற மலையடுக்கங்களிலும், ஊர்தோறும் ஊர்தோறும் எடுத் துக்கொண்ட திருவிழாவிலும், தம்மேலன்புடையவர்கள் துதித்தலால் தமது திருவுளம் விரும்பிய இடத்திலும், படிமத்தான் செய்த வெறியாடுகளத்திலும், காட்டிலும் சோலையிலும், ஆற்றிடைக்குறையிலும், நதிகளிலும், குளங்களிலும், வேறு பல ஊர்களிலும், நாற்சந்தி முச் சந்தி ஐஞ்சந்திகளிலும், கடம்பிலும், ஊருக்குநடுவே எல்லோருமிருக்கும் மரத்தடியிலும், அம்பலத்திலும், ஆத்தீண்டு குற்றியையுடைய இடத்திலும், குறப்பெண் ணானவள் முருகியம்பண்ணி முருகாற்றுப்படுக்கின்ற உறு கெழு நகரிலும், உரிய வேறுதலங்களிலும்,

பலவேறு நிலையிற் கொண்டாடப்படுகின்றது.

பிண்டத்திலும், அதன் சாயலான அண்டத்திலும் ஒப்பத்திகழ்கின்ற கோலாகலமான வேலவன் திருப்பவ னியை, எடுத்த பிறப்பிற் கண்டு களிக்க வாய்க்குமோ என்று ஏக்கங்கொண்டு,

இகலொடு செற்றம் நீக்கிய மனத்தினர்களும், யாவ துங் கற்றோர் அறியா அறிவினர்களும், கற்றோர்க்குத் தாம் வரம்பாகிய தலைமையர்களும், காமமொடு கடுஞ்

சினம் கடிந்த காட்சியர்களும் ஆகிய துனியில் காட்சி முனிவர்களும், நாற்பத்தெட்டியாண்டு பிரமசரியங் காத்து, அறமேபுரிகின்ற கோட்பாட்டினையும், முத்திச் செல்வத்தினையும் உடைய இருபிறப்பாளர்களும் தவங் கிடக்கின்றார்கள்; வாயூறுகின்றார்கள்.

இங்ஙனம் ஆறறி அந்தணர்களும், முற்றத்துறந்த முனிவர்களும், அவன் பவனிக்கு நனிவாடவும், அந்த வேலவன், மலையடுக்கங்களிலே, அறிவு அறை போகிய வர்களே ஆயினும், நெஞ்சிலே வஞ்சகம் இல்லாத, தூய வேட்டுவக் குழாத்தோடு கூடி ஆடுகின்றான்; பாடுகின்றான்; அளைகின்றான்; குழைகின்றான்.

'பைங்கொடி நறைக்காய் இடையிடுபு வேலன்
அம்பொதிப் புட்டில் விரைஇக் குளவியொடு
வெண்கூட தாளந் தொடுத்த கண்ணியன்
நறுஞ்சாந் தணிந்த கேழ்கிளர் மார்பிற்
கொடுந்தொழில் வல்விற் கொலைஇய கானவர்
நீடமை விளைந்த தேக்கட் டேறற்
குன்றகச் சிறுகுடிக் கிளையுடன் மகிழ்ந்து
தொண்டகச் சிறுபறைக் குரவை அயர
விரலுளர்ப் பவிழ்ந்த வேறுபடு நறுங்காற்
குண்டு சுனை பூத்த வண்டுபடு கண்ணி
இணைத்த கோதை அணைத்த கூந்தன்
முடித்த குல்லை இலையுடை நறும்பூச்
செங்கால் மராஅத்த வாலிணர் இடையிடுபு
சுரும்புணத் தொடுத்த பெருந்தண் மாத்தழை

திருந்துகா ழல்குல் திளைப்ப உடீஇ
மயில்கண் டன்ன மடநடை மகளிரொடு
செய்யன்; சிவந்த ஆடையன்; செவ்வரைச்
செயலைத் தண்டளிர் துயல்வருங் காதினன்;
கச்சினன்; கழலினன்; செச்சைக் கண்ணியன்;
குழலன்; கோட்டன்; குறும்பல்லி யத்தன்;
தகரன்; மஞ்ஞையன்; புகரில் சேவலங்
கொடியன்; நெடியன்; தொடியணி தோளன்;
நரம் பார்த் தன்ன இன்குரற் றொகுதியொடு
குறும் பொறிக் கொண்ட நறுந்தண் சாயன்
மருங்கிற் கட்டிய நிலனேர்பு துகிலினன்;
முழவுறழ் தடக்கையி னியல வேந்தி
மென்றோட் பல்பிணை தழீஇத்தலைத் தந்து
குன்றுதோ றாடலும் நின்றதன் பண்பே.

கலியுகத்திலே அதுவுங் கதிரைமலைக்குன்றிலே கலி யுகவரதனாய்ப் பரிபூரண கலையோடு **கதிர்காம வேலவன் பவனி வருகின்றான்;** *கருணை பொழிகின்றான்.*

பக்தர்களே வம்மின்! வம்மின்!

"ஐம்புலன் செலவிடுத்து அருவரை தொறும் போய்த்
துற்றவை துறந்த வெற்றுயிர் ஆக்கை
அருந்தவர் காட்சியுள் திருந்த ஒளித்தும்
ஒன்றுண் டில்லை என்றறி வொளித்தும்
பண்டே பயில் தொறும் இன்றே பயில் தொறும்
ஒளிக்குஞ் சோரனைக் கண்டனம்

ஆர்மின் ! ஆர்மின் ! நாண்மலர்ப் பிணையலில்
தாள் தனை இடுமின் !
சுற்றுமின் ! சூழ்மின் ! தொடர்மின்! விடேன்மின் !
பற்றுமின் !!"

"முந்து நீகண்டுழி முகனமர்ந் தேத்திக்
கைதொழூஉப் பரவிக் காலுற வணங்கி
நெடும் பெருஞ் சிமயத்து நீலப் பைஞ்சுனை
ஐவருள் ஒருவன் அங்கை ஏற்ப
அறுவர் பயந்த ஆறமர் செல்வ ;
ஆல் கெழு கடவுட் புதல்வ ; மால்வரை
மலை மகண் மகனே ; மாற்றோர் கூற்றே ;
வெற்றி வெல்போர்க் கொற்றவை சிறுவ ;
இழையணி சிறப்பிற் பழையோள் குழவி ;
வானோர் வணங்குவிற் றானைத் தலைவ ;
மாலை மார்ப ; நூலறி புலவ ;
செருவில் ஒருவ ; பொருவிறன் மள்ள ;
அந்தணர் வெறுக்கை ; அறிந்தோர் சொன்மலை ;
மங்கையர் கணவ ; மைந்தர் ஏறே ;
வேல் கெழு தடக்கைச் சால்பெருஞ் செல்வ ;
குன்றங் கொன்ற குன்றாக் கொற்றத்து
விண்பொரு நெடுவரைக் குறிஞ்சிக் கிழவ ;
பலர் புகழ் நன்மொழிப் புலவ ரேறே ;
அரும் பெறன் மரபிற் பெரும்பெயர் முருக ;

நசையினர்க் கார்த்தும் இசைபே ரான ;
அலந் தோர்க் களிக்கும் பொலம்பூட் சேஎய் ;
மண்டமர் கடந்தநின் வென்று டகலத்துப்
பரிசிலர்த் தாங்கும் உருகெழு நெடுவேள் ;
பெரியோர் ஏத்தும் பெரும் பெயர் இயவுள் ;
சூர் மருங் கறுத்த மொய்ம்பின் மதவலி ;
போர் மிகு பொருந ; குரிசில்;''

என்றிங்ஙனம் யான் நுமக்கு அறிவித்த அளவி னாலும், நீவிர் அறிந்த அளவினாலும் அவனை நீங்காது, பலவாறு புகழ்ந்து, உம்முடைய தன்மைகளெல்லாவற் றையும் முற்ற அளவிட்டு அறிதல் உயிர்களுக்கு அரிது ஆகையால், ''உம்முடைய திருவடியைப் பெறல்வேண்டு மென்று நினைந்து வந்தேம். உம்மோடு ஒப்பவர் இல்லாத மெய்ஞ்ஞானத்தை உடையவரே'' என்று நீவிர் கருதிய வீடுபேற்றை விண்ணப்பஞ்செய்யுங்கள்; அவ்வாறு விண் ணப்பஞ்செய்வதற்கு முன்னமே, அவனுடைய **பரிசனங் கள்**, ஒருசேரத் தோன்றி, சுவாமீ, அறிவு முதிர்ந்த **நுமதன் பர்கள்** உமது புகழை, இனியனவும், உறுதி பயப்பனவும் ஆக, வாழ்த்திக்கொண்டு காத்துநிற்கிறார்கள்; அவர்கள் பரிசுத்தர்கள்; உம்மாலே காக்கப்படத்தக்கவர்கள்' என்று கூறுவார்கள். அப்படி அவர்கள் கூறக் கதிரை மலைக்கு உரியவனாகிய **அவ்வேலவன்** வெளிப்பட்டுக், கட்புலங்கடந்த தனது ஒளிவடிவத்தை உள்ளடக்கிக் கொண்டு, என்றும் இளைய அழகு வடிவத்தை எடுத்துக் கொண்டு, ''முத்திபெற நினைந்து வந்த நும் வரவை யான்

அறிவல் ;அது நுமக்கு எய்துதல் அரிது என்று அஞ்சுதலைப் பரிகரியுங்கள்'' என்று நும்மேல் அன்பினையுடைய நல்ல வார்த்தைகளைப் பலதரமும் கலந்து பேசி, உலகத்தின் கண்ணேயே நீவிரே பிறருக்கு வீடளித்தற்கு உரியீராகத் திருவருளாகிய பரிசிலைத் தந்தருளுவன்.

"எய்யா நல்லிசைச் செவ்வேற் சேஎய்
சேவடி படருஞ் செம்மல் உள்ளமொடு
நலம்புரி கொள்கைப் புலம்பிரிந் துறையுஞ்
செலவுநீ நயந்தனை யாயிற் பலவுடல்
நன்னர் நெஞ்சத்து இன்னசை வாய்ப்ப
இன்னே பெறுதிநீ முன்னிய வினையே"

'இறவாமற் பிறவாமல் எனையாள்சற் குருவாகிப்
பிறவாகித் திரமான பெருவாழ்வைத் தருவாயே
குறமாதைப் புணர்வோனே குகனேசற் குமரேசா
கறையானைக் கிளையோனே கதிர்காமப் பெருமாளே'

சேவலும் மயிலும் போற்றி

உ

தோத்திரம்

குன்ற மெறிந்தாய் குரைகடலிற் சூர்தடிந்தாய்
புன்றலைய பூதப் பொருபடையாய்—என்றும்
இளையாய் அழகியாய் ஏறூர்ந்தா னேறே
உளையாயென் னுள்ளத் துறை.

குன்ற மெறிந்ததுவுங் குன்றப்போர் செய்ததுவும்
அன்றங் கமரரிடர் தீர்த்ததுவும்—இன்றென்னைக்
கைவிடா நின்றதுவுங் கற்பொதும்பிற் காத்ததுவும்
மெய்விடா வீரன்கை வேல்.

வீரவேல் தாரைவேல் விண்ணோர் சிறைமீட்ட
தீரவேல் செவ்வேள் திருக்கைவேல்—வாரி
குளித்த வேல் கொற்றவேல் சூர்மார்புங் குன்றுந்
துளைத்தவேல் உண்டே துணை.

இன்னம் ஒருகால் எனதிடும்பைக் குன்றுக்குக்
கொன்னவில்வேற் சூர்தடிந்த கொற்றவா—முன்னம்
பனிவேய் நெடுங்குன்றம் பட்டுருவத் தொட்ட
தனிவேலை வாங்கத் தரும்.

உன்னை ஒழிய ஒருவரையு நம்புகிலேன்
பின்னை ஒருவரையான் பின்செல்லேன்—பன்னிருகைக்
கோலப்பா வானோர் கொடியவினை தீர்த்தருளும்
வேலப்பா செந்திவாழ் வே.

அஞ்சுமுகந் தோன்றில் ஆறுமுகந் தோன்றும்
வெஞ்ச மரில் அஞ்சலென வேல்தோன்றும்—நெஞ்சில்
ஒருகால் நினைக்கில் இருகாலுந் தோன்றும்
முருகாஎன் றோதுவார் முன்.

முருகனே செந்தி முதல்வனே மாயோன்
மருகனே ஈசன் மகனே—ஒருகை முகன்
தம்பியே நின்னுடைய தண்டைக்கால் எப்பொழுதும்
நம்பியே கைதொழுவேன் நான்.

காக்கக் கடவியநீ காவா திருந்தக்கால்
ஆர்க்குப் பரமாம் அறுமுகவா—பூக்கும்
கடம்பா முருகா கதிர்வேலா நல்ல
இடங்காண் இரங்காய் இனி.

மூவிரு முகங்கள் போற்றி முகம்பொழி கருணை போற்றி
ஏவருந் துதிக்க நின்ற இராறுதோள்போற்றி காஞ்சி
மாவடி வைகுஞ் செவ்வேள் மலரடி போற்றி அன்னான்
சேவலும் மயிலும் போற்றி திருக்கைவேல் போற்றி போற்றி

கந்தநம ஐந்துமுகர் தந்தமுரு கேசநம கங்கை உமை தன்
மைந்தநம பன்னிரு புயத்த நம நீபமலர் மாலை புனையுந்
தந்தை நம ஆறுமுக ஆதிநம சோதிநம தற்பர மதாம்
எந்தைநம என்றுமிளை யோய்நம குமாரநம என்றுதொழுதார்

முழுமதி யன்ன ஆறு முகங்களும் முந்நான் காகும்
விழிகளின் அருளும் வேலும் வேறுள படையின் சீரும்
அழகிய கரமீ ராறும் அணிமணித் தண்டை ஆர்க்கும்
செழுமல ரடியுங் கண்டான் அவன் தவம் செப்பற் பாற்றே.

அணிமையிற் சேயோ னண்ண ஆறுமா முகமும் பன்னி
ரிணை தவிர் புயமுங் கையும் எந்தெழிற் படையுஞ்சீரும்
மணியணி மார்புஞ் செங்கேழ் வான்றுகில் மருங்கும் பாதத்
துணையுமத் துணையிற் கண்டு தொழுதுகண் களிப்புக்
கொண்டார்.

வீறு கேதனம் வச்சிரம் அங்குசம் விசிகம்
மாறிலாத வேல் அபயமே வலம் இடம் வரதம்
ஏறுபங்கயம் அணிமழுத் தண்டு வில் இசைந்த
ஆறிரண்டு கை அறுமுகம் கொண்டு வேள் அடைந்தான்.

எங்கணும் பணிவதனங்கள் எங்கணும் விழிகள்
எங்கணுந் திருக் கேள்விகள் எங்கணுங் கரங்கள்
எங்கணுந் திருக் கழலடி எங்கணும் வடிவம்
எங்கணுஞ் செறிந் தருள்செயும் அறுமுகத் திறைக்கே

வேதக் காட்சிக்கும் உபநிடத் துச்சியில் விரித்த
போதக் காட்சிக்குங் காணலன் புதியரிற் புதியன்
மூதக் கார்க்குமூ தக்கவன் முடிவிற்கு முடிவாய்
ஆதிக் காதியாய் உயிர்க்குயிராய் நின்ற அமலன்.

ஆயது காலேதன்னில் அவுணர்கோன் அநந்தகோடி
ஞாயிறு திரண்டொன் ருகி ஞாலமேலிருளை ஓட்டிச்
சேயுயர் விசும்பை நீங்கிச் செருநிலத் துற்ற தென்னத்
தூயதோர் குமரன் போரில் தோன்றிய தோற்றங் கண்டான்.

முண்டக மலர்ந்த தன்ன மூவிரு முகமுங் கண்ணும்
குண்டல நிரையுஞ் செம்பொன் மவுலியுங் கோலமார்பும்
எண்டகு கரமீ ராறும் இலங்கெழிற் படைகள் யாவும்
தண்டையும் சிலம்பும் ஆர்க்குஞ் சரணமுந் தெரியக்
கண்டான்.

இன்னமும் முனிவர் தேவர் யாவருமிவேயன் என்றே
உன்னருந் தலைமைத் தாகும் ஒருதனிக் குமரன் றன்னைத்
தன்னிரு விழியாற் கண்டான் தானவர்க் கிறைவன் என்ருல்
அன்னவன் தவத்தின் பேற்றை யாரறிந் துரைக்கற் பாலார்.

மூவர்கண் முதல்வன் வந்தான் முக்கணன் குமரன் வந்தான்
மேவலர் மடங்கல் வந்தான் வேற்படை வீரன் வந்தான்
ஏவருந் தெரிதல் தேற்ரு திருந்திடுமொருவன் வந்தான்
தேவர்கள் தேவன் வந்தான் என்றன சின்னம் எல்லாம்.

செய்ய தாமரை வனங்களுஞ் செங்கதிர்த் தொகையும்
ஐய சேயொளி ஈன்றிருந்தென்ன ஆறிரண்டு
கையும் மூவிரு முகங்களும் உடையவன் காலோன்
வையம் உந்திட அடுதொழில் இயற்றுவான் வந்தான்.

காலமாய்க் காலமின்றிக் கருமமாய்க் கருமமின்றிக்
கோலமாய்க் கோலமின்றிக் குணங்களாய்க் குணங்களின்றி
ஞாலமாய் ஞாலமின்றி அநாதியாய் நங்கட் கெல்லாம்
மூலமா யிருந்த வள்ளல் மூவிரு முகங்கொண் டுற்றான்.

செஞ்சுடர் அநந்த கோடி செறிந்தொருங் குதித்ததென்ன
விஞ்சிய கதிர்கான் றுள்ள வியன்பெரு வடிவை நோக்கி
நெஞ்சகந் துளங்கிவிண்ணோர் நின்றனர் நிமல மூர்த்தி
அஞ்சன் மின் அஞ்சன்மின் என்றருளினன் அமைத்த கையான்.

கோலமா மஞ்ஞை தன்னிற் குலவிய குமரன் றன்னைப்
பாலனென் றிருந்தேன் அந்நாட் பரிசிவை உணர்ந்திலேன் யான்
மாலயன் றனக்கு மேனை வானவர் தமக்கும் யார்க்கும்
மூலகாரணமாய் நின்ற மூர்த்தி யிம் மூர்த்தியன்றோ.

போயின அகந்தை போதம் புகுந்தன வலத்த தான
தூய தோர் தோளுங் கண்ணுந் துடித்தன புவனமெங்கு
மேயின பொருள்கண் முற்றும் வெளிப்படுகின்ற விண்ணோர்
நாயகன் வடிவங் கண்டேன் நற்றவப் பயன் ஈதன்றோ.

சூழுதல் வேண்டுந் தாள்கள் தொழுதிடல் வேண்டும் அங்கை
தாழுதல் வேண்டுஞ் சென்னி துதித்திடல் வேண்டுந் தாளு
ஆழுதல் வேண்டுந் தீமை யகன்று நான் இவற்காளாகி
வாழுதல் வேண்டும் நெஞ்சந் தடுத்தது மான மொன்றே.

நண்ணினர்க் கினியாய் ஓலம் ஞானநா யகனே ஓலம்
பண்ணவர்க் கிறையே ஓலம் பரஞ்சுடர் முதலே ஓலம்
எண்ணுதற் கரியாய் ஓலம் யாவையும் படைத்தாய் ஓலம்
கண்ணுதற் பெருமான் நல்குங் கடவுளே ஓலம் ஓலம்.

தேவர்கள் தேவே ஓலம் சிறந்தசிற் பரனே ஓலம்
மேவலர்க் கிடியே ஓலம் வேற்படை விமலா ஓலம்
பாவலர்க் கெளியாய் ஓலம் பன்னிரு புயத்தாய் ஓலம்
மூவருமாகி நின்ற மூர்த்தியே ஓலம் ஓலம்.

துய்யதோர் மறைகளாலுந் துதித்திடற் கரிய செவ்வேள்
செய்யபே ரடிகள் வாழ்க சேவலும் மயிலும் வாழ்க
வெய் யசூர் மார்புகீண்ட வேற்படை வாழ்க அன்னான்
பொய்யில் சீரடியார் வாழ்க வாழ்கவிப் புவன மெல்லாம்.

மூன்னான்கு தோளும் முகங்களோர் மூவிரண்டுங்
கொன்னார் வைவேலுங் குலிசமு மேனைப் படையும்
பொன்னார் மணி மயிலுமாகப் புனக் குறவர்
மின்னாள் கண் காண வெளி நின்றனன் விற லோன்

ஆறிரு தடந்தோள் வாழ்க அறுமுகம் வாழ்க வெற்பைக்
கூறுசெய் தனிவேல் வாழ்க குக்குடம் வாழ்க செவ்வேள்
ஏறிய மஞ்ஞை வாழ்க யானைதன் னணங்கு வாழ்க
மாறிலா வள்ளி வாழ்க வாழ்க சீரடிய ரெல்லாம்.

புன்னெறி யதனிற் செல்லும் போக்கினை விலக்கி மேலாம்
நன்னெறி ஒழுகச் செய்து நவையறு காட்சி நல்கி
என்னையும் அடிய னாக்கி இருவினை நீக்கியாண்ட
பன்னிரு தடந்தோள் வள்ளல் பாதபங் கயங்கள்போற்றி.

பொய்யற்ற கீரன் முதலாம் புலவோர் புகழ்ந்த
ஐயற் கெனது சிறு சொல்லும் ஒப்பாகும் இப்பார்
செய்யுற்றவன் மால் உமை பூசைகொள் தேவதேவன்
வையத்தவர் செய்வழி பாடு மகிழு மன்றே.

வேலும் மயிலுந் துணை

உங்கள் இடங்களின் மங்கள சூரியன்

மெய்கண்டான் திருக்குறட் கலண்டர்

தமிழ் உலகில் முதன்முதல் வெளிவந்தது.
அறிஞர் அன்பும், ஆதரவும், ஆசியும் பெற்று விளங்குவது.

கல்லார்க்கும், நல்லார்க்கும், கல்லூரி வல்லார்க்கும்
எல்லார்க்கும் ஏற்கும் இது.

அன்புக்குரிய ஆப்த நண்பர்களுக்கு ஞாபகப் பொருளாக
அனுப்பத் தகுந்தது.

ஆங்கில தமிழ் அறபுத் தேதிகளும், திதி, நக்ஷத்திரம், யோகம், விரத விசேஷங்கள், விசேஷ அடையாளங்கள், திருநாட்கள், தினக்கரும நற்குறிப்புகள் முதலியனவும். திருக்குறள், இனிய கருத்துரை. அறிஞர் மணிமொழிகள், விடுமுறை நாட்கள், திருக்குறட் சாரம், இராகு காலம், பொது சுபநேரம் முதலியனவும் பிறவும் கொண்டுள்ளது.

"மெய்கண்டான்"

* திருக்குறட் கலண்டர் No. 1
* நன்மொழிக் கலண்டர் No 2
* முதுமொழிக் கலண்டர் No. 3
* பஞ்சாங்கக் கலண்டர் No. 4
  (3 தேதிகளும் விசேஷங்களும் கொண்டது)
* இங்கிலிஷ் கலண்டர் No. 5
  (பெயரடித்து இனாம் கொடுக்க உகந்தது)
* தமிழ் டயறி No, 1
  (1 பக்கத்திற்கு 1 நாளுள்ளது)
* திருக்குறள் டயறி No. 2
* டெஸ்க் டயறி (மிகப் பெரிது) No. 3
* இங்கிலிஷ் டயறி No. 4
  (றெக்சின் தோல் பைண்ட் செய்தது)
* இங்கிலிஷ் டயறி (சாதாரண பைண்ட்) No. 5

உங்களுக்கு என்ன வேண்டும் ?

* உலகப் பிரசித்திபெற்ற N. V. S. பட்டணம் பொடியா ?

* சவரன் பரிமள பாக்குத் தூளா ?

* T. A. R. சந்தனாதித் தைலமா ?

* மெய்கண்டான் திருக்குறட் கலன்டர், டயறிகளா ? பலவர்ணப் படங்களா ?

* கோவில்களுக்கும், கல்யாண வைப வத்திற்கும் உகந்த புஷ்ப மாலைகளா ?

* தோல் சம்பந்தமான எல்லா வியாதி கட்கும் சிறந்த 'சைபால்' மருந்தா ?

* சிறந்த ஊதுபத்தி, வாசனைத் திரவி யங்கள் முதலியனவா ?

இவற்றிற்கு
இலங்கையில் சிறந்த ஒரே ஒரு இடம்

எஸ். ஞானம் அன் சன்ஸ்,

47, செட்டியார் தெரு, கொழும்பு.